DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No. II , Sattur.

# STC No. 1665/2015

Deposition of Witness for P.W.3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.வேல்முருகன் | ஜாதி | : | |
| த/பெ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 17.12.2018

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது சாத்தூர் தாலுகா காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.06.14ம் தேதி இருக்கண்குடி காவல்நிலையத்தில் பணிபுரிந்த போது அன்று காலை 9.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த போது சாத்தூர் தாலுகா கோஸ்குண்டு போஸ்ட் முத்தார்பட்டியை சேர்ந்த முத்துக்கருப்பன் மகன் அழகுமலை (50) என்பவர் காயத்துடன் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று இருக்கண்குடி கா.நிலைய குற்ற எண் 97/2014 பிரிவுகள் 294(பி), 323, 506(1) இதச ஆக வழக்கு பதிவு செய்தேன். அந்த புகார் மனு என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான். அது அழகுமலை என்னிடம் கொடுத்த புகார் மனு தான். அந்த புகார் மனு அ.சா.ஆ 2 ஆகும். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 3 ஆகும். பின்னர் முதல் தகவல் அறிக்கையின் அசலுடன் வாதியின் புகார் மனுவையும் இணைத்து கணம் நீதித்துறை நடுவர் எண்2 சாத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் , அதன் ஒரு நகலை மேல் விசாரணைக்காக சார்பு ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்தேன். காயம்பட்ட வாதிக்கு மருத்துவ நமுனா 62/S5PS/2014 நாள் 13.06.14 உடன் சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தேன். இது சம்பந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

கு.வி.

புகார் கொடுக்க காவல்நியைத்திற்கு புகார்தாரருடன் ஒருவர் வந்தார். புகாரில் இரண்டு நபர்கள் தாக்கியதாக சொல்லியுள்ளாரா என்றால் சொல்ல

வில்லை. புகாரை எங்கு வைத்து எழுதினார் என்று புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகாரை பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பின்னிட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணைக்கு வைத்தேன் என்று சொன்னால் சரியல்ல.